# நாட்டின் முதலாவது நகர் மறு

# மேம்பாட்டுச் சட்ட வரைவு

# இறுதிக்கட்டத்தில் உள்ளது



ஹாங்காங், மார்ச் 9-

மலேசியாவின் முதலாவது நகர் மறு மேம்பாட்டுச் சட்ட வரைவு அதன் இறுதிக்கட்டத்தில் இருக்கிறது. முழுமைபெற்றதும் நாடாளுமன்ற மக்களவையில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று வீடமைப்பு, ஊராட்சித்துறை அமைச்சர் ஙா கோர் மிங் கூறினார்.

இன்றளவில் டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்றம், மாநில அரசாங்கங்கள் உட்பட துறை சார்ந்த பல்வேறு தரப்பினருடன் பல டவுன்ஹால் சந்திப்புகளை நடத்தி இருக்கிறது. நாட்டிற்கான நகர் மறுமேம்பாட்டிற்கான பிரதான வழிகாட்டி நகர், நாடு திட்டமிடல் இலாகா (பிளான் மலேசியா) வழி முழுமை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு அமைச்சரவை 2023இல் ஒப்புதல் அளித்திருக்கிறது என்று அவர் சொன்னார்.

இந்தச் சட்டத்தை வரைவதற்கு அட்டர்னி ஜெனரல் அலுவலகத்தின் திட்ட வரைவுப் பிரிவு உட்பட பல்வேறு ஏஜென்சிகளுடன் தம்முடைய அமைச்சு மிக அணுக்கமாகச் செயலாற்றி வருவதாக ஙா கோர் மிங் தெரிவித்தார்.

இங்கு ஹாங்காங், சீனாவின் ஷென்ஸென் ஆகிய இடங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டிருக்கும் அமைச்சர் தி ஏட்ஜ், பெர்னாமா ஆகியவற்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் இத்தகவலைத் தெரிவித்தார்.

நகர் மறு மேம்பாட்டுச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிறைய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கும். பல கோடி ரிங்கிட் நிகர மேம்பாட்டு மதிப்பைக் கொண்ட திட்டங்களைக் கொண்டு வந்து சேர்க்கும் என்று அவர் கூறினார்.

தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட எல்லையில் மறு மேம்பாட்டிற்குத் தகுதி பெற்றவை என்று நம்பப்படும் 1,372 ஏக்கர் பகுதியை டிபிகேஎல் அடையாளம் கண்டுள்ளது. இந்த 131 சாத்தியப்பூர்வமான பகுதிகள் மறு மேம்பாடு செய்யப்பட்டால் சொத்து மதிப்பு பன்மடங்காக உயரும் என்று அவர் தெரிவித்தார்.

தேசிய மரபுடைமைக் கட்டடங்களை இனி அழிக்க வேண்டியதில்லை. மாறாக அவற்றை மறு மேம்பாடு செய்து பாதுகாப்பதற்குரிய வாய்ப்புகளையும் இச்சட்டம் வழங்கும். உதாரணமாக, வரலாற்றுப்பூர்வ தைப்பிங் சந்தை 1874ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இது மலாயாவின் முதல் பொதுச் சந்தையாகும். தற்போது இந்தச் சந்தை மிகப்பெரிய உருமாற்றத்தைக் கண்டு வருகிறது. இதன் பணிகள் வரும் அக்டோபரில் நிறைவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என ஙா கோர் மிங் கூறினார்.